**MCOP NO:2196/2024** **DATE: 04.07.2025**

ம.சா : 1

பெயர் : திரு. ஜெயபால் (எ) ஜெயபாலன்

த/பெ : திரு. அப்பு

வயது : 74

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 10 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. அணிந்திருந்தேன். நான் தலைக்கவசம் அணநந்து பயணம் செய்திருந்தால் எனக்கு தலையில் காயங்கள் ஏற்பட்டிருக்காது என்றாலும் தலைக்கவசம் அணிந்து செல்லாததால் தான் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனத்தை திடிரென்று பிரேக் போட்டு நிறுத்தியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப்ப காயங்கள் என்று சொன்னால் சரியல்ல. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. தொழில், வருமானம் மற்றும் வருமான இழப்பை காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. அதனால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.